TNVR090002072022

சார்பு நீதிமன்றம், விருதுநகர்
முன்னிலை திரு. R.V. ராஜகுமார், பி.எல்.

சார்பு நீதிபதி, விருதுநகர்.

2023 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13 ம் நாள் வியாழக்கிழமை

இந்து திருமண முதலேற்பு மனு 51/2022

----

P. சுவாதி, த/பெ.(லேட்)பரமகுரு, கதவு எண்.1/150, அக்ரஹாரத்தெரு, புதுக்கோட்டை, புதுக்கோட்டை (அஞ்சல்), எரிச்சநத்தம் வழி, சிவகாசி வட்டம், விருதுநகர் மாவட்டம்.

.... மனுதாரர்

/எதிர்/

S.முத்துப்பாண்டி, த/பெ.(லேட்).சல்லிமுத்து, கதவு எண்.1/18, வடக்குத்தெரு, புதுக்கோட்டை, புதுக்கோட்டை (அஞ்சல்), எரிச்சநத்தம் வழி, சிவகாசி வட்டம், விருதுநகர் மாவட்டம்.

..... எதிர்மனுதாரர்

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே கடந்த 08.09.2019 ம் தேதி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்கி உத்தரவிட வேண்டி மனுதாரர் இந்த மனுவை இந்து திருமணச்சட்டம் 1955 பிரிவு 13(1)(i-a)ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்.

நீதிமன்றக் கட்டணம் – ரூ.50/–

மனுதாக்கல் நாள் – 25.03.2022

இந்த மனுவானது இந்நீதிமன்றத்தில் இன்று (13.04.2023) இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்

திரு.V.பழனிச்சாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சரவணக்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிருரை தாக்கல் செய்வதற்கு போதிய காலஅவகாசம் அளித்தும் தாக்கல் செய்யாத நிலையில் எதிர்மனுதாரரை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் எதிர்மனுதாரர் ஒருதரப்பாக்கப்பட்ட நிலையில், மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரையில் இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து அளிக்கும்,

<u>உத்தரவாணை</u>

1. இந்த மனு அனுமதிக்கப்படுகிறது.
2. மனுதாருக்கும், எதிர்மனுதாருக்கும் இடையே 08.09.2019 ம் தேதியன்று நடைபெற்ற திருமணமானது இந்து திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம் 1955 பிரிவு 13(1)(i-a)ன் கீழ் ரத்து செய்யப்பட்டு விவாகரத்து வழங்கப்படுகிறது.
3 செலவுத்தொகை இல்லை.

(இரு தரப்பிலும் செலவுத்தொகை பட்டியல் தாக்கல் இல்லை)

2023 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13 ம் நாள் என்னுடைய கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

சார்பு நீதிபதி,
விருதுநகர்.

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
H.M.O.P.51/2022
உத்தரவாணை
நாள்: 13.04.2023